தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும்போது அலர் போன்ற காரணங்களால் கற்பு வாழ்க்கையாகிய இல்லற வாழ்வு நடத்த முற்படுவர். களவுக்கும் கற்புக்கும் ஆகிய இடைப்பட்ட காலத்தில் மணம் (வரைவு) நிகழ்தல் தொடர்பாக ஏற்படும் நிகழ்வுகளைத் தொகுத்து விளக்குவதே வரைவியல் ஆகும்.

## வரைவின் இலக்கணம்

171. **வரைவு எனப்படுவது உரவோன் கிழத்தியைக்**
**குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்**
**கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.**

வரைவு என்று சொல்லப்படும் திருமணம் கொடுப்ப அமைவதும் கொடாது அமைவதும் என்னும் இரு நிலையில் நிகழும். தலைவனுக்குத் தலைவியை அவள் பெற்றோர் முதலானோர் கொடுக்கவும் அவர்கள் கொடுக்காத நிலையிலும் திருமணச் சடங்குடன் வரைவு நிகழும்.

(1)

## வரைவிற்குரிய கிளவித் தொகை

172. **வரைவு மலிவே அறத்தொடு நிற்றல் என்று**
**உரையமை இரண்டும் வரைவிற்கு உரிய**
**கிளவித் தொகைஎனக் கிளந்தனர் புலவர்.**

***1. வரைவு மலிதல், 2. அறத்தொடு நிற்றல்*** என்னும் இரண்டும் வரைவு நிகழ்தற்கு உரிய கிளவித் தொகை எனப்படும்.

(2)

## 1. வரைவு மலிதல்

வரைவு எனப்படும் திருமணத்தை நடத்தும் முயற்சியை விரைந்தும் மகிழ்ந்தும் செய்தல் **வரைவு மலிதல்** எனப்படும்.

### வரைவு மலிதலின் வகை

173. **வரைவுமுயல்வு உணர்த்தல் வரவுஎதிர்வு உணர்த்தல்**
**வரைவுஅறிந்து மகிழ்தல் பராவல்கண்டு உவத்தல் என்று**
**ஒருநால் வகைத்தே வரைவு மலிதல்**

*1. வரைவு முயல்வு உணர்த்தல், 2. வரவு எதிர்வு உணர்த்தல், 3. வரைவு அறிந்து மகிழ்தல், 4. பராவல் கண்டு உவத்தல் என வரைவு மலிதல் நான்கு வகைப்படும்.*

**1. வரைவு முயல்வு உணர்த்தல் :** வரைவுக்கான முயற்சி நடப்பதைத் தோழி தலைவிக்கு அறிவித்தல்.

**2. வரைவு எதிர்வு உணர்த்தல் :** தலைவன் சுற்றத்தார் மணம் பேசி வந்த போது தலைவியின் சுற்றத்தார் அதனை ஏற்றுக் கொண்டமையைத் தோழி தலைவிக்குக் கூறுதல்.

**3. வரைவு அறிந்து மகிழ்தல் :** சுற்றத்தார் தன் திருமணத்தை ஏற்றுக் கொண்டமை அறிந்து தலைவி மகிழ்தல்.

**4. பராவல் கண்டு உவத்தல் :** தன் திருமணம் நன்கு நிறைவேறத் தெய்வத்தைத் தலைவி வணங்குவது கண்டு தலைவன் மகிழ்தல்.

(3)

### வரைவு மலிதலின் விரி

174. **காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி**
**காதலிக்கு உணர்த்தலும் காதலி நற்றாய்**
**உள்ள மகிழ்ச்சி உள்ளலும் பாங்கி**
**தமர்வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தலும்**
**அவள்உவகை ஆற்றாது உளத்தோடு கிளத்தலும்**
**தலைவனைப் பாங்கி வாழ்த்தலும் தலைவி**
**மணப்பொருட்டாக அணங்கைப் பராநிலை**
**காட்டலும் கண்டோன் மகிழ்வும்என்று ஈட்டிய**
**இருமூன்று ஒன்றும் வரைவு மலிதற்காம்**
**விரியென விளம்பினர் மெய்யுணர்ந் தோரே.**

மேற்குறிக்கப்பட்ட ஏழும் வரைவு மலிதலின் விரியாகும் என்பர்.

**1. காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உணர்த்தல்**

தாய் தலைவிக்குப் பால் கொடுத்து வளர்த்ததற்காகவும் மண நிகழ்விற்காகவும் பரிசப் பொருள் கொடுத்ததைப் பாங்கி தலைவியிடம் கூறுதல்.

தலைவியே! மகளிர் தழை அணிந்து மகிழும் கடற் துறைத் தலைவன், பரிசப் பொருளாக ஒருநாட்டையே நல்கி உள்ளான்.

**ஏக்கர் ஞாழல் மலரின் மகளிர்**
**ஒண்தழை அயரும் துறைவன்**
**தண்தழை விலையென நல்கினன் நாடே.** **(ஐங்.147)**

## ௨. காதலி நற்றாய் உள்ள மகிழ்ச்சி உள்ளல்

தலைவி தன்னைப் பெற்ற நற்றாய் அடைந்த மகிழ்ச்சியை எண்ணிப் பார்த்தல்.

சந்தன மரத்தைச் சுடுவதால் எழும்புகை மலைச்சாரல் முழுதும் மணக்கும் நாடனாகிய நம் தலைவன் மணம்பேசி வரைவான் என்றால் நம்தாய் இல்லத்தில் மணம் நிகழ்த்துவாள் போலும்.

**குன்றக் குறவன் சாந்த நறும்புகை**
**தேங்கமழ் சிலம்பின் வரையகம் கமழும்**
**கானக நாடன் வரையின்**
**மன்றலும் உடையள் கொல் தோழி யாயே?** **(ஐங்.253)**

## 3. பாங்கி தமர் வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல்

175. முன்னிலை முன்னிலைப் புறமொழி என்றாங்கு
அன்ன இருவகைத்து அறத்தொடு நிலை.

**1. முன்னிலை, 2. முன்னிலைப் புறமொழி** என அறத்தொடு நிற்றல் இருவகையில் அமையும்.

**1. முன்னிலை:** முன் நிற்பாரோடு நேரடியாகக் கூறுதல்.

**2. முன்னிலைப் புறமொழி :** முன் நிற்பாரிடம் கூற வேண்டியதை வேறு யாரிடமோ கூறுவது போலக் கூறுதல்.

**அறத்தொடு நிற்றலின் விரி**

அறத்தொடு நிற்றல் பின்வருமாறு மூன்று நிலையில் அமைந்து வரும்.

**3வகை**

- **தலைவி அறத்தொடு நிற்றல்**
- **பாங்கி அறத்தொடு நிற்றல்**
- **செவிலி அறத்தொடு நிற்றல்**

(5)

## 2.1 தலைவி அறத்தொடு நிற்றல்

176. கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தல் காரணம் கூறலும் தலைவன்
தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
எய்தக் கூறலும் இகந்தமை இயம்பலும்
இயற்பழித்து உரைத்துழி இயற்பட மொழிதலும்
தெய்வம் பொறைகொளச் செல்குவம் என்றலும்
இல்வயின் செறித்தமை சொல்லலும் செவிலி
கனையிருள் அவன்வரக் கண்டமை கூறலும்
எனமுறை இயம்பிய ஏழும் புனையிழைத்
தலைவி அறத்தொடு நிலைதனக்கு உரிய.

மேற்குறிக்கப்பட்ட ஏழும் தலைவி அறத்தொடு நிற்றலின் விரி எனப்படும்.

**1. கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக் கலுழ்தல் கூறல்**

இதில் தலைவனைப் பிரிந்து வாழும் தலைவியின் துயருக்குப் பாங்கி காரணம் கேட்டலும் அதற்குத் தலைவி பதில் கூறலும் என இரு வகையில் அமையும்.

**1. அ. பாங்கி காரணம் கேட்டல்**

கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கும் தலைவியிடம் அதற்கான காரணத்தைப் பாங்கி கேட்டல்.

தலைவியே! நின் பார்வையை அலைகள் அழித்தனவா? அன்னை வெகுண்டாளா? பலரும் பழிதூற்றுமாறு நீ கண்ணீர் விடக் காரணம் யாது? நின் செயல் என் நெஞ்சை வருத்துகின்றது. **என் உயிராகிய தையல் நீ கலுழ்வான் என் உளங் குழைந்தே.** (குறுந். கோ.288)

**1. ஆ. தலைவி காரணம் கூறல்**

தலைவி அழுததற்கான காரணத்தைப் பாங்கியிடம் கூறுதல் பாங்கியே! தலைவரால் காம இன்பம் பெற்ற யாம், அவர் பிரிவால் காம நோயைப் பொறுத்துக் கொண்ட போதிலும் கண்கள் அவர்பாலுள்ள உரிமையினால் அழுதன.

**யாம் எம்காமம் தாங்கவும் தாம்தம்**
**கெழு தகைமையின் அழுதன - தோழி!**
**.......**
**குன்ற நாடற் கண்ட எம்கண்ணே** **(குறுந்.241)**

2. தலைமகன் தெய்வஞ் சுட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல்

## 2.2 பாங்கி அறத்தொடு நிற்றல்

177. எறிவளை வேற்றுமைக்கு ஏது வினாவினும்
வெறி விலக்கியவழி வினாவினும் பாங்கி
பூவே புனலே களிறே என்றிவை
ஏது வாகத் தலைப்பாடு இயம்பும்.

மேற்குறிப்பிட்டவாறு பாங்கி அறத்தொடு நிற்றல் ஐந்து வகையில் அமையும்.

**1. செவிலி தலைமகள் வேற்றுமை கண்டு பாங்கியை வினாதல்**

தலைவியிடம் மாறுபாட்டைக் கண்ட செவிலி பாங்கியிடம் வினாதல்.

பசலை கொங்கையில் படர்ந்துள்ளது; கண்கள் கண்ணீரைப் பொழிகின்றன. தினைப்புனம் காவலுக்குச் சென்றதற்குப் பிறகு இம்மாற்றம் தெரிகிறது. யாது காரணம் கூறுவாயாக (பாங்கியே)!

**பொன்னுற்ற கொங்கையும் முத்துற்ற கண்ணும் இப்போது கண்டேன்**

**என்னுற்றது என்றறியேன் புனம் காவல் இருந்த பின்னே**

**(தஞ்.கோ.297)**

**காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்**
**தாமரைக் கண் புதைத்து அஞ்சித் தளர்ந்து அதனோடு ஒழுகலான்**
**நீள் நாக நறுந்தண்தார் தயங்கப் பாய்ந்து அருளினால்**
**பூண் அகம் உறத்தழீஇப் போத்தந்தான் அகன் அகலம்**
**வருமுலை புணர்ந்தன என்பதனால் என் தோழி**
**அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே** *(கலித்.39)*

**5. பாங்கி களிறு தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்**

தாக்க வந்த யானையிடமிருந்து தலைவியை ஒருவன் காத்தான். அப்போதிருந்து அவனுடன் களவொழுக்கத் தொடர்பு ஏற்பட்டதாகப் பாங்கி செவிலியிடம் கூறுதல்

தினைப் புனக் காவலின் போது யானை தாக்க வர, பரணில் ஏறிக் காத்துக் கொள்ள முடியாதபோது ஒருவன் வந்து தலைவியைக் காத்து அவள் கூந்தலில் மலர்களைச் சூடினான். அன்று முதல் அவனோடு தலைவிக்குக் களவொழுக்கம் ஏற்பட்டதாகப் பாங்கி செவிலியிடம் கூறினாள்.

**சுள்ளி சுனைநீலம் சோபாலிகை செயலை**
**அள்ளி அளகத்தின் மேலாய்ந்து - தெள்ளி**
**இதணால் கடியொடுங்கா ஈர்ங்கடா யானை**
**உதணால் கடிந்தான் உளன்** **(திணைமாலை.2)**

**(7)**

## 2.3 செவிலி அறத்தொடு நிற்றல்

**178. மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினாவுழி**
**முன்னிலை மொழியால் மொழியும் செவிலி.**

தலைவியிடம் காணப்படும் வேற்றுமையை அறிந்து அதற்கான காரணத்தை நற்றாய் செவிலியிடம் வினாவுதல் ஒரு வகையாக மட்டும் அமையும்.

**1.அ. தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல்**

தலைவியின் உடல் மற்றும் உள்ள மாற்றங்கண்டு செவிலித்தாயை நாற்றாய் வினாதல்.

கண்ணில் செவ்வரி படர்ந்துள்ளது. நெற்றியில் வியர்வை அரும்புகின்றது. அவளைச் சுற்றி வண்டுகள் மொய்க்கின்றன. தோள் வாடியுள்ளது. அவள் அடைந்துள்ள மாற்றம் ஏன்?

**கண்ணும் சேயரி பரந்தன்று நுதலும்**
**நுண்வியர் பொடித்து வண்டார்க் கும்மே**
**வாங்கமை மென்றோள் மடந்தை**
**யாங் காயினள்கொல் என்னும்என் நெஞ்சே.**

**(தொல்.பொருள். உரைமேற்கோள்)**

**1.ஆ. செவிலி முன்னிலை மொழியால் நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்**

நன்னுதலை உடைய நற்றாயே! ஒரு செல்வர் நம் மகளுக்கு மார்பகம் அரும்பியும் அரும்பாத பெதும்பைப் பருவத்தில் இங்கு ஒரு கலைமான் வந்ததோ என்று கேட்டு வந்து அவளுடன் இணைந்தார். **இங்கோர் கலை வந்ததோ என வந்து வினாவி.... முயங்கினரே** *(தஞ்.கோ.304)*

(8)

## அறத்தொடு நிற்றலின் விரி இவை எனல்

179. என்றுடன் இயம்பிய எல்லாம் களவியல்
நின்றுழி அறத்தொடு நிற்றலின் விரியே.

முன்னே கூறியவை தலைவி அறத்தொடு நிற்றல், பாங்கி அறத்தொடு நிற்றல், செவிலி அறத்தொடு நிற்றல் என்பவற்றின் விரிகளாகும்.

| அறத்தொடு நிற்றல் | |
|---|---|
| *1. தலைவி அறத்தொடு நிற்றல் 176* | *1<br>2<br>3<br>4<br>5<br>6<br>7* |
| *2. பாங்கி அறத்தொடு நிற்றல் 177* | *1<br>2<br>3<br>4<br>5* |
| *3. செவிலி அறத்தொடு நிற்றல் 178* | *1* |
| மொத்தம் | *13* |

(9)

நிகழ்ந்து கற்பு வாழ்க்கை தொடரும்.

## களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை

180. போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சி என்றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படும் தொகையே.

***1. உடன்போக்கு, 2. கற்பொடு புணர்ந்த கவ்வை, 3. மீட்சி*** என்னும் மூன்றும் களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகை ஆகும்.

**1. உடன்போக்கு :** தலைவன் தலைவியைத் தன்னூர்க்கு உடன் அழைத்துச் சேறல்

**2. கற்பொடு புணர்ந்த கவ்வை :** தலைவி தலைவனுடைய உரிமையாய்க் கற்பொடு கூடியிருத்தலை, அயலார் விரவிய சேரியினர் பலரும் அறிதல் (கவ்வை - அலர்வெளிப்பாடு)

**3. மீட்சி :** தலைவியைத் தேடிச் சென்ற செவிலி மீண்டு வருதல்; உடன்போன தலைவன் தலைவியர் மீண்டு வருதலும் ஆம்

## 3. உடன்போக்கு

தலைவி தலைவனுடன் தனித்துப் புறப்பட்டு வேற்றூர் சேர்தலாகும். தலைவனுக்கும் தலைவிக்கும் களவொழுக்கம் ஏற்பட்டுப்பல நாள் நீடிக்கிறது. தலைவனின் பிரிவு, ஊரின் அலர், இல்லத்தோரின் இற்செறிப்பு போன்றவற்றால் தலைவி காமவேட்கை மிக்குத் துன்பப்படுவாள்.

இனிமேல், களவொழுக்கத்தை நீட்டிக்க முடியாது என்னும் நிலை வரும்போது தலைவன், தலைவி இருவரும் யாரும் அறியாமல் இரவில் வேற்றூருக்குப் புறப்பட்டுக் களவொழுக்கத்தைப் பிறர் அறியுமாறு செய்வதே உடன் போக்காகும். இது களவு வெளிப்பாட்டுக் கிளவிகளில் முதலாவதாகும்.

### உடன்போக்கின் வகை –8

181. போக்கு அறிவுறுத்தல் போக்கு உடன்படாமை
போக்கு உடன்படுத்தல் போக்கு உடன்படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றல் என்று
யாப்பமை உடன்போக்கு இருநான்கு வகைத்தே.

*மேற்குறிப்பிட்டவாறு உடன்போக்கு* **போக்கு அறிவுறுத்தல்** *முதலாக* **தேற்றல்** *ஈறாக எட்டு வகைப்படும்.*

**1. போக்கு அறிவுறுத்தல்:** *பாங்கி தலைவனிடம் தலைவியை உடன் கொண்டு போகுமாறு அறிவுறுத்தல்.*

**2. போக்கு உடன்படாமை :** *தலைவனும் தலைவியும் உடன்போக்கை மறுத்தல்.*

**3. போக்கு உடன்படுத்தல் :** *உடன்கொண்டு செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தலைவனுக்கும் கற்பின் மேன்மையைத் தலைவிக்கும் எடுத்துக் கூறி, தோழி இருவரையும் உடன்போக்குக்கு ஒப்புக் கொள்ள வைத்தல்.*

**4. போக்கு உடன்படுதல்:** *தலைவனும் தலைவியும் உடன்போக்கிற்கு ஒப்புக் கொள்ளுதல்.*

**5. போக்கல்:** *தலைவனுடன் தலைவியைப் பாங்கி உடன் அனுப்புதல்.*

**6. விலக்கல்:** *உடன்போக்கில் களைப்படைந்த தலைவன், தலைவியைக் கண்டோர் அவர்களது செலவைத் தடுத்துத் தம் இல்லத்தில் தங்கிப் போகுமாறு வேண்டல்.*

**7. புகழ்தல்:** *கண்டோர் தலைவன் தலைவியைப் புகழ்ந்து கூறுதல்.*

**8. தேற்றல்:** *கண்டோர் தலைவனது ஊர் அருகில் இருப்பதைக் கூறியும் தலைவன், தன் ஊர் வந்து விட்டமையைக் கூறியும் தலைவியைத் தேற்றுதல்.*

(11)

### உடன்போக்கின் விரி –18

182. பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தலும்
ஆங்கவன் மறத்தலும் அவள் உடன்படுத்தலும்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தலும் தலைவி
நாணழிபு இரங்கலும் கற்பு மேம்பாடு
பூண்முலைப் பாங்கி புகறலும் தலைவி
ஒருப்பட்டு எழுதலும் விருப்புடைப் பாங்கி

**சுரத்தியல் உரைத்துழிச் சொல்லலும் பாங்கி**
**கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலும்**
**அவன்சுரத்து உய்த்தலும் அசைவு அறிந்திருத்தலும்**
**உவந்துஅலர் சூட்டி உள்மகிழ்ந்து உரைத்தலும்**
**கண்டோர் அயிர்த்தலும் காதலின் விலக்கலும்**
**தன்பதி அணிமை சாற்றலும் தலைவன்**
**தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தலும்**
**என்றிவை ஒன்பதிற்று இருவகைக் கிளவியும்**
**ஒன்றிய அன்பின் உடன்போக்கு விரியே.**

மேற்குறிப்பிட்டபடி பாங்கி தலைவனுக்கு உணர்த்தல் முதலாகத் தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினெட்டும் உடன்போக்கின் விரியாகும்.

**1. பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்**

தலைவியின் இல்லத்தோர் தலைவனுக்குப் பெண் கொடுக்க உடன்படாததால் பாங்கி அவனுக்கு உடன்போக்கை வலியுறுத்தல்.

தலைவனே! நீண்ட கண்களை உடைய தலைவியை விழா மலிந்த நின் நாட்டுக்கு நீ அழைத்துச் சென்று மணப்பதைத் தவிர வேறு வழியே எனக்குத் தெரியவில்லை.

**செந்நீர் விழவணி நின்னகர்க்கே கொண்டு சேர்ந்தருள் மற்று**
**இந்நீர்மை அல்லது ஓர் ஆறும் இன்றால்** (தஞ்.கோ.305)

**2. தலைவன் உடன்போக்கு மறுத்தல்**

பாங்கி தலைவியுடன் உடன் போகச் சொன்னதற்குத் தலைவன் மறுத்தல்.

பாங்கியே! தலைவியின் சுற்றத்தார் இந்தப் பூமியோ நீ தரும் பரிசம் எனக் கேட்கின்றனர். யான் வாழும் ஊரும் தொலை தூரத்தில் இருக்கின்றது. மேலும் கரடுமுரடான காட்டில் தலைவியைத் தனியாக அழைத்துக் கொண்டு செல்ல முடியுமோ? **பாரே முலைவிலை என்பர் நும்கேளிர்.... யாரோ தனி நடப்பார் அருங்கானம் இவளுடனே.** (தஞ்.கோ.306)

**3. பாங்கி தலைவனை உடன்படுத்தல்**

தலைவியின் இல்லத்திலுள்ள நிலவரங்களைக் கூறிப் பாங்கி தலைவனை உடன்போக்கிற்கு உடன்பட வைத்தல்.

உமணரின் உப்பு வண்டிகள் போல் வரிசையாக நீண்டிருக்கும் கிளைகளை யானைகள் முறிக்கும் வலிமையற்ற வறண்ட காட்டில் நின்னோடு வருவதற்குத் தலைவி விரும்புவாள்.

## 2. கற்பொடு புணர்ந்த கவ்வை

தலைவன் தலைவிக்குள் களவொழுக்கம் ஏற்பட்ட பிறகு தலைவனை நினைந்தே தலைவி கற்பு வாழ்க்கைக்கு உட்பட்டு வாழ்கிறாள். இது ஊரில் அலர், கவ்வை - பழிச்சொல் ஆகின்றது.

கவ்வை என்பது தலைவன், தலைவி கற்பு வாழ்க்கை வாழ்வதற்கு முன் ஏற்படும் பழிச் சொல்லாகும். இது களவு வெளிப்பாட்டுக் கிளவிகளில் இரண்டாவதாகும்.

## கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை –5

183. **செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல்**
**கவர்மனை மருட்சி கண்டோர் இரக்கம்**
**செவிலிபின் தேடிச் சேறல் என்றாங்குக்**
**கற்பொரு புணர்ந்த கௌவை ஐவகைத்தே.**

மேற்கூறப்பட்ட ***1. செவிலி புலம்பல், 2. நற்றாய்*** புலம்பல், ***3. கவர்மனை மருட்சி, 4. கண்டோர் இரக்கம், 5. செவிலி பின் தேடிச் சேறல்*** என்னும் ஐந்தும் கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரியாகும்.

**1. செவிலி புலம்பல் :** தலைவி தலைவனுடன் சென்றதை அறிந்து செவிலி புலம்புதல்.

**2. நற்றாய் புலம்பல் :** தலைவி தலைவனுடன் சென்றதை அறிந்து நற்றாய் புலம்புதல்.

**3. கவர்மனை மருட்சி :** தலைவன் தலைவி உடன் போக்கு அறிந்து நற்றாய் வீட்டில் இருந்து புலம்புதல்.

**4. கண்டோர் இரக்கம் :** பாங்கியும் தலைவியின் தாயும் வருந்துவது கண்டு கண்டோர் இரக்கப்பட்டுக் கூறுதல்.

**5. செவிலி பின் தேடிச் சேறல் :** தலைவியைத் தேடிக் கொண்டு செவிலி போதல்.

(13)

## கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரி –21

செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், கவர்மனை மருட்சி, கண்டோர் இரக்கம், செவிலி பின் தேடிச்சேறல் என்னும் கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை ஐந்தும் இருபத்தொரு விரிகளைப் பெற்றுள்ளன.

### 1. செவிலி புலம்பல்

184. **வினவிய பாங்கியின் உணர்ந்த காலை**
**இனையல் என்போர்க்கு எதிரழிந்து மொழிதலும்**
**தன்னறி வின்மை தன்னைநொந்து உரைத்தலும்**
**தெய்வம் வாழ்த்தலும் இவ்வொரு மூன்றும்**
**இலங்கிழைச் செவிலி புலம்புதற்கு உரிய.**

மேலே குறிப்பிட்டபடி செவிலி புலம்பலின் விரி மூன்று வகையில் அடங்கும்.

## 1. வினவிய பாங்கியின் உணர்ந்த காலை இனையல் என்போர்க்கு எதிரழிந்து மொழிதல்

இவ்விரியில் அ.செவிலி பாங்கியை வினவல், ஆ.பாங்கி செவிலிக்கு உணர்த்தல், இ.பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல் என மூன்று பிரிவுகள் உள்ளன.

### 1.அ செவிலி பாங்கியை வினவல்

தலைவி இல்லாததை அறிந்த செவிலி அவளைப் பற்றிப் பாங்கியிடம் வினவுதல்.

என் ஆருயிர் மகளே! உன் தோழியாகிய நம்தலைவி நம்மை எல்லாம் விட்டு எங்குச் சென்றனள்: **புறம்புற மாதர் எங்கே மகளே! தனியே போயினளே** (தஞ்.கோ.323)

### 1.ஆ. பாங்கி செவிலிக்கு உணர்த்தல்

தலைவி தலைவனோடு உடன்போக்குச் சென்றதைப் பாங்கி செவிலிக்குக் கூறுதல்.

அன்னையே! மணம் பேசி வந்த தலைவனை நமர் வெறுத்தனர். மணம் பேச மறுத்தனர். தன் காமக் கற்பைப் போற்றத் தலைவி தலைவனுடன் உடன் போகத் தலைப்பட்டாள்: **வெறுத்தார் ஓறுத்துரை வேலும் நம் கேளிர் விழைதல் இன்றி மறுத்தார் அவற்கு மணம்... காமர் கற்பால் பொறுத்தாள் அழற் சுரம் தன்னை (தஞ்.கோ.324)**

### 1.இ. பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல்

தலைவியின் பிரிவால் அழுது புலம்பிய செவிலியைத் தேற்றுவார்க்கு அவள் வருந்திக் கூறுதல்.

முத்துப் போன்ற பல்லையுடைய தலைவி தலைவனுடன் உடன் போக்குச் சென்றாள். தாயாக யான் பெயர் பெற்றாலும் அவளைத் தலைவனுக்கு உரிமையாக்கும் பேறு பெற்றவர்கள் அவளுடைய ஆயர் கூட்டமாகிய பாங்கியரே ஆவர்

**அத்த நீளிடை அவனொடு போகிய**
**முத்துஏர் வெண்பல் முகிழ்நகை மடவரல்**
**தாயர் என்னும் பெயரே வல்லாறு**
**எடுத்தேன் மன்ற யானே**
**கொடுத்தோர் மன்ற அவள் ஆயத்தோரே**

**(ஐங்.380)**

## 2. தன்னறிவின்மை தன்மை நொந்து உரைத்தல்

தலைவியின் உடன்போக்கை அறிந்து தன் அறியாமைக்காகச் செவிலி நொந்து கூறுதல்.

## 2. நற்றாய் புலம்பல்

தலைவியின் உடன்போக்கினைச் செவிலி வாயிலாக அறிந்த நற்றாய் என்னையும் செவிலியையும் பாங்கியையும் ஆயத்தையும் நீத்து ஊரார் அலர் தூற்ற ஒரு காளையின் பின் என்மகள் போயினளே' யான் எங்ஙனம் ஆற்றுவேன்? என்பது படப் புலம்புதல்.

185. செவிலி அறத்தொடு நிற்றலில் கவலையில்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடும்
அயலார் தம்மொடும் பயிலிடம் தம்மொடும்
தாங்கலள் ஆகிச் சாற்றிய எல்லாம்
பூங்கொடி நற்றாய் புலம்பற்கு உரிய.

மேற்குறிப்பிட்ட படி நற்றாய் புலம்பலுக்கு நான்கு வகையான விரி அமையும்.

### 1. செவிலி அறத்தொடு நிற்றலில் கவலையில் பாங்கி தன்னொடு நற்றாய் புலம்பல்

இவ்விரியில் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல், நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல் என இருவகை அடங்கும்.

### 1.அ செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

தலைவிக்குத் தலைவனோடு ஏற்பட்ட களவொழுக்கத்தைச் செவிலி நற்றாய்க்குக் கூறி அறத்தொடு நிற்றல்.

நாலூர்க் கோசரின் வாய்மொழி போல, காலில் கட்டிய கழலினையும் இலைபோன்ற வெள்ளிய வடிவினையும் உடைய தலைவனோடு பல்வகை வளையல்களை அணிந்த தலைவியின் நட்பு உண்மை ஆயிற்று.

**நால்ஊர்க் கோசர் நன்மொழி போல**
**வாய் ஆகின்றே தோழி - ஆய்கழல்**
**சேயிலை வெள்வேல் விடலையொடு**
**தொகுவளை முன்கை மடந்தை நட்பே** **(குறுந்.15)**

**1.ஆ. நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்**

மகளைப் பிரிந்த நற்றாய் தலைவியின் தோழியாகிய பாங்கியிடம் புலம்புதல்.

களிறும் பிடியும் கன்றுகளோடு திரியும் காட்டிடையே தலைவி தலைவனுடன் சென்ற இடம் மிகவும் கடுமையானது. பேரன்பு கொண்ட பாங்கியர் உடனிருக்க இங்கே நிகழும் மணம் தரும் இன்பத்தினும் உடன் போக்கு உன் தோழிக்கு இனிதாகுமோ?

**தன்அமர் ஆயமொடு தன்மண நுகர்ச்சியின்**
**இனிதுஆம் கொல்லோ தனக்கே - பனிவரை**
**இனக்களிறு வழங்கும் சோலை**
**வயக்குறு வெள்வேலவன் புணர்ந்து செலவே** ***(ஐங்.379)***

**2. நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்**

நற்றாய் தலைவியின் பாங்கியர்களைக் கண்டு அவர்களிடம் புலம்புதல்.

இப்பாவையுடன் பாவை போன்ற மகள் விளையாடினாள். என் பைங்கிளி மகள் கையில் வைத்து மகிழந்த பைங்கிளி இது. என் மகள் போல் மழலை பேசும் பூவை. ஒளி பொருந்திய நெற்றியையும் குவளைமலர் கண்களையும் உடைய என் மகள் யான் வருந்துமாறு தலைவனும் எவ்வாறு பிரிந்து சென்றனள்?

**இதுஎன் பாவைக்கு இனிய நற்பாவை**
**இதுஎன் பைங்கிளி எடுத்த பைங்கிளி**
**இதுஎன் பூவைக்கு இனியசொற் பூவைஎன்று**
**அலமரு நோக்கின் நலம்வரு சுடர்நுதல்**
**காண்தொறும் காண்தொறும் கலங்க**
**நீங்கினளோ என் பூங்க ணோளே?**

***(ஐங்.375)***

3. கவர்மனை மருட்சி (அனை (அன்னை) மருட்சி)

தலைவன் தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்ல அவள் உடன்போக்கினை அறிந்த நற்றாய் மன மகிழ்வோடு அஃது அறம் என்று கருதியும் தனியே தன்மகள் கொடிய பாலைவழியில் சென்றது கண்டு ஆற்றாளாய்த் தன் மகளுடைய கண்கள் பாலையின் வெப்பத்தால் சிவந்து ஒளி மழுங்கிக் கழலும் என வருந்துதல்

(தமிழ். இல.பேர.அகம் 4:152)

186. நிமித்தம் போற்றலும் சுரம்தணி வித்தலும்
தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கலும்
இளமைத் தன்மைக்கு உளம்மெலிந்து இரங்கலும்
அச்சத் தன்மைக்கு அச்சமுற்று இரங்கலும்
எனஇவை ஐந்தும் அனைமருட்சிக்கு உரிய.

மேற்குறிப்பிட்டபடி அனை மருட்சியின் விரி ஐந்தாகும் என்பர்.

1. நிமித்தம் போற்றல்

உடன்போக்குப் போன தலைவி மீண்டும் தன் இல்லத்திற்கு வருவாளா என நிமிர்த்தம் (நல்ல சகுனம்) பார்த்தல்.

கரிய காக்கையே! தலைவனுடன் உடன் போக்குச் சென்ற தலைவி மீண்டும் இங்கு வருவாள் என நன்னிமித்தமாகக் கரைவாயாக! அவ்வாறு நீ கரைந்து அவள் வந்தால் நினக்கும் நின் சுற்றத்திற்கும் பசிய ஊன் கலந்த உணவை அளிப்பேன்.

**மறுஇல் தூவிச் சிறுகருங் காக்கை**
**அன்புடை மரபினின் நின்கிளையோடு ஆரப்**
**பச்சூன் பெய்தி பைந்நிண வல்சி**
**பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ**
**வெஞ்சின விறல்வேல் காளையொடு**
**அஞ்சில் ஓதியை வரக் கரைந்தீமே** **(ஐங்.391)**

**2. நற்றாய் சுரம் தணிவித்தல்**

தலைவி உடன்போக்குச் சென்ற பாலை நிலவழி செம்மையாக அமைய வேண்டுதல்.

தன்னுடைய களவொழுக்க வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கையாக மாற்றத் தலைவி தலைவனொடு செல்லும் பாலை நிலவழி மழை பெய்து வெம்மை நீங்கிக் குளிர்ச்சி உடையதாக ஆகுக.

**மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்**
**உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்**
**சுரம் நனி இனிய ஆகுக தில்ல**
**'அறநெறிஇது' எனத் தெளிந்த என்**
**பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே** **(ஐங்.371)**

**3. நற்றாய் தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல்**

உடன்போக்குச் சென்ற தலைவியாகிய தன்மகளின் மென்மை நினைந்து நற்றாய் வருந்துதல்.

கருஞ்சிவப்பு ஆம்பல் மலர் போன்ற வாயும் மென்மையான இடையும் கொண்ட என்மகள் செம்பஞ்சுக் குழம்பைப் பஞ்சில் தொட்டுத் தடவும்போதும் 'மெல்ல, மெல்ல' என்பாள். கற்கள் நிறைந்த காட்டில் அவள் எவ்வாறு நடந்தனளோ?

**அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற்கு அன்னோ!**
**பரற்கானம் ஆற்றின் கொல்லோ - அரக்கார்ந்த**
**பஞ்சிகொண்டு ஊட்டினும் பையெனப் பையென என்று**
**அஞ்சிப்பின் வாங்கும் அடி!**

**(நாலடி.396)**

## 5. நற்றாய் தன்மகள் அச்சத் தன்மைக்கு அச்சமுற்று இரங்கல்

தன் மகள் எல்லாவற்றுக்கும் அஞ்சும் தன்மையை நினைந்து நற்றாய் அஞ்சி வருந்துதல்.

மடமயில் போன்ற என் மகள் தலைவன் தோளில் சாய்ந்தாலும் தூங்கமாட்டாள். ஆனேறுகளைக் கவரும் கள்வர்கள் அடிக்கும் பறையொலி கேட்டு அஞ்சி அழுவளோ என நினைத்து என் நெஞ்சம் அழுகிறது.

**மடமயில் அன்னஎன் நடைமெலி பேதை**
**தோள் துணையாகத் துயிற்றத் துஞ்சாள்**
**வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கண்**
**சேக்கோள் அறையும் தண்ணுமை**
**கேட்குநள் சொல்? எனக்கலுழும் என்நெஞ்சே** **(அகம்.63)**

**(16)**

## 4. கண்டோர் இரக்கம் (இரங்கல்)

தலைவியின் பிரிவால் மிக்க துயருற்றுப் புலம்பும் நற்றாய், செவிலி, பாங்கி ஆகியோரைக் கண்டு அயலார் தாமும் துயருற்றுக் கூறுதல்.

**187. ஆயமும் தாயும் அழுங்கக் கண்டோர்**
**காதலின் இரங்கல் கண்டோர் இரக்கம்.**

உடன்போக்குச் சென்ற தலைவிக்காகப் பாங்கியரும் செவிலித் தாயும் நற்றாயும் வருந்தி அழுவதைக் கண்டோர் இரக்கப்படுதல்.

தலைவி தலைவனுடன் பல நாடுகளைக் கடந்து சென்று விட்டாள். பாங்கியர் கூட்டமும் அழுது புலம்புகின்றது. தலைவியின் தாயும் தன்னுயிர் போகட்டும் என்று வருந்துகின்றாள். மகள் விளையாடிவிட்டுப் போட்டுச் சென்ற பாவையை எடுத்து அதன் கண்ணையும் நெற்றியையும் தடவி நொச்சி நிழலில் கிடத்தினாள். குவளை மலரை அதற்குச் சூடி 'என் குடிப்பிறந்த வழித் தோன்றலே! நினது தோளினைத் தருவாயாக என்று அழுது புலம்புகிறாள்.

## 3. மீட்சி

உடன்போக்கில் சென்ற தலைவன், தலைவியைத் தேடிச் சென்ற செவிலி காணாது மீண்டும் வருவதும் தலைவனும் தலைவியும் திரும்பி வருவதும் இதில் அடங்கும். களவு வெளிப்பாட்டுக் கிளவிகளில் **மீட்சி** என்பது மூன்றாவதாகும்.

### மீட்சியின் வகை –4

190. **தெளித்தல் மகிழ்ச்சி வினாதல் செப்பல்என**
**வெளிப்பட உரைத்த மீட்சிநால் வகைத்தே.**

***1. தெளித்தல், 2. மகிழ்ச்சி, 3.வினாதல், 4. செப்பல்*** என மீட்சி நான்கு வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**1. தெளித்தல்**

**அ.** செவிலி நற்றாய்க்கு மகள் நெடுந்தூரம் சென்று விட்டதைக் கூறித் தெளிவித்தல்

**ஆ.** தலைவன் மீண்டு வந்து தலைவியின் ஊர் வந்து விட்டதைச் சொல்லித் தெளிவித்தல்

**2. மகிழ்ச்சி**

**அ.** வழியில் தலைவிக்கு முன்னே போவோர் சென்று பாங்கியிடம் தலைவி வருவதைக் கூற, அதனால் பாங்கியர் மகிழ்தல்

**ஆ.** பாங்கியர் சென்று நற்றாய்க்குக் கூற அவள் மகிழ்தல்

**3. விளித்தல்**

மீளும் தலைவன் நம்மகளை நம் இல்லத்துக்கு அழைத்து வருவானா? அல்லது தன்மனைக்கே அழைத்துப் போவானா? என நற்றாய் வேலனைக் குறி கேட்டல்

**4. செப்பல்**

முன் சென்றோர் தலைவியின் வருகையைக் கூறுதல்

(20)

### மீட்சியின் விரி –6

191. **தலைவிசேண் அகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தலும்**
**தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றலும்**
**தலைவிமுன் செல்வோர் தம்மொடு தான்வரல்**
**பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தலும் ஆங்கவர்**
**பாங்கியர்க்கு உணர்த்தலும் ஆங்கவர் கேட்டு**
**நற்றாய்க்கு உணர்த்தலும் நற்றாய் கேட்டுஅவன்**
**உளம்கோள் வேலனை வினாதலும் எனவுடன்**
**விளம்பும் இருமூன்றும் மீட்சியின் விரியே.**

மேலே குறிக்கப்பட்ட ஆறும் மீட்சியின் விரி எனப்படும்.

**1. தலைவி சேண் அகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல்**

தொலைவிலுள்ள தன் ஊருக்குத் தலைவன் தலைவியை அழைத்துச் சென்றதைச் செவிலி நற்றாயிடம் கூறுதல்.

நம்முடைய அன்புக்குரிய மகள் நம் உயிர் பிரியும் அளவிற்கு நமக்கு இன்னலைத் தந்து பல நாடுகளையும் காடுகளையும் கடந்து தலைவன் ஊருக்குச் சென்று விட்டாள்.

**தெறுவது அம்ம நும்மகள் விருப்பே**
**உறுதுயர் அவலமொடு உயிர்செலச் சாஅய்**
**பாழ்பாடு நெஞ்சம் படர்அடக் கலங்க**
**நாடுஇடை விலங்கிய வைப்பின்**
**காடு இறந்தனள் நம் காதலோளே!** ***(ஐங்.313)***

**2. தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்**

தம்முடைய ஊரை அடைந்து விட்டமையைத் தலைவன் தலைவியிடம் கூறுதல்.

பல்வேறு இன்னல்களைத் தந்த காடு மலைகளைக் கடந்து நாம் நம் ஊரை அடைந்து விட்டோம். பூக்கள் நிறைந்த நீர் அருவியில் கொட்டும் சோலை சூழ்ந்த நம் மலை நாட்டில் மெல்ல நடப்பாயாக.

***இன்னா அருஞ்சுரம் தீர்ந்தனம்; மென்மெல***
***ஏகுமதி வாழியோ குறுமுகள்! போது கலந்து***
***கறங்கு இசை அருவி வீழும்***
***பிறங்கு இருஞ்சோலை, நம்மலை கெழுநாட்டே*** ***(ஐங். 395)***

**3. தலைவி முன் செல்வோர் தம்மொடும் தன்வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தல்**

தம் முன்னே செல்வோரிடம் தலைவி தன் வரவைப் பாங்கியரிடம் கூறச் சொல்லுதல்.

செந்நாய், தன்குட்டியோடு நிற்கும் பன்றியை எதுவும் செய்யாமல் செல்லும் சுரத்தைக் கடந்து வந்து கொண்டிருக்கிறாள் தலைவி என்று என்பாங்கியர் கூட்டத்தில் சொல்வீராக.

**கவிழ்மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றை**
**குருளைப் பன்றி கொள்ளாது கழியும்**
**சுரம்நனி வாரா நின்றனள் என்பது**
**முன்னுற விரைந்த நீர் உரைமின்**
**இன்னகை முறுவல் என்ஆயத் தோர்க்கே** ***(ஐங்.397)***

**4. முன் சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்**

முன்னால் விரைந்து சென்றோர் தலைவியின் வருகையைப் பாங்கியர் கூட்டத்தல் கூறுதல்.

பாங்கியரே! உங்கள் தலைவி தலைவனின் பின்னால் வரக் கண்டனம் : **காதலன் பின்வரக் கண்டனம்.... மாமுலைத் தோகையரே** (தஞ்.கோ.352)

**உடன்போய் வரைந்து மீளுதற்கும் வரையாமல் மீண்டு அவள் மனையின் கண்ணாதல் தன் மனையின் கண்ணாதல் வரைதற்கும் உரிய கிளவிகள்**

192. மடந்தையை உடன்போய் வரைந்து மீடற்கும்
அவள்மனை வரைதற்கும் தன்மனை வரைதற்கும்
இவைஐந்தும் உரிய செவிலிகூற்று ஒழித்தே.

மீட்சி விரியில் (191) கூறப்பட்ட [illegible] ஆறனுள் தலைவி சென்ற அகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல் நீக்கி.

1. தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்.
2. தலைவி முன் செல்வோர் தம்மொடும் தன்வரல் பாங்கியர்க்கு உணர்த்தல்.
3. முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்.
4. பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்.
5. நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினாதல்.

என்னும் ஐந்துடன் **6. தன்மனை வரைதல், 7. உடன்போக்கு இடையீடு, 8. வரைதல்** என்பவை இப்பகுப்புள் அடங்கும் மீட்சி விரி ஆறில் ஒன்று தவிர மற்றையவை (2-6) 191ஆம் நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளன. மற்றையவை இனி விளக்கப்படும்

(22)

## 6. தன்மனை வரைதல்
## தன்மனை வரைதலின் வகை –3

193. வினாதல் செப்பல் மேவல்என்று இறைவன்
தனாதுஇல் வரைதல் தான் மூவகைத்தே.

**1. வினாதல், 2. செப்பல், 3.மேவல்** என்பவை மூன்றும் தலைவன்தன் இல்லத்தில் வரைதல் ஆகும்.

**1. வினாதல் :** தலைவியின் நற்றாய் செவிலியிடம், "திருமணத்தை நம்மனைக் கண்ணே நடத்துவோம் என்று தலைவனுடைய நற்றாய்க்குக் கூறி, அவள் கருத்தை அறிவோமா" என வினவுதல்.

**2. செப்பல் :** பாங்கி செவிலியிடம் தலைவியைத் தலைவன் தன் ஊரில் வரைந்து கொண்டான் என்று கூறலும் அதைச் செவிலி நற்றாயிடம் கூறலும் வரைந்து கொண்டதைச் சுற்றத்தார்க்குக் கூறுமாறு தலைவன் பாங்கியிடம் கூற, அவள் முன்னரே தான் அதனை அவர்க்குக் கூறி விட்டமையைக் கூறலும்.

**3. மேவல் :** தலைவன் தோழியிடம் தான் தலைவியை வரைந்து கொண்டதைக் கூறி, அதனைத் தலைவியின் தமர்க்கு அறிவித்துவிடக் கூறுதல்.

(23)

**தன்மனை வரிதலின் விரி –5**

194. **பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையில்
செவிலியை வினாதலும் செவிலிக்கு இகுளை
வரைந்தமை உரைத்தலும் வரைந்தமை செவிலி
நற்றாய்க்கு உணர்த்தலும் உற்றாங்கு இருவரும்
தலைவிஇல் வந்துழித் தலைவன் பாங்கிக்கு
யான்வரைந் தமைநுமர்க்கு இயம்புசென்று என்றலும்
தானது முன்னே சாற்றியது உரைத்தலும்
என்னும் இவ்வைந்தும் மின்னிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே.**

*மேற்குறிக்கப்பட்ட ஐந்தும் தன்மனை வரைதல் என்பதன் விரியாகும்.*

**1. பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதல்**

*தலைவியின் நற்றாய் தன் இல்லத்தில் மணம் நிகழ வேண்டுவது தொடர்பாகச் செவிலியை வினவுதல்.*

*வெற்றி வேலையும் கழலையும் அணிந்த பொய்பேசும் தலைவனின் தாயிடம் உன் இல்லத்தில் தலைவிக்குச் செய்யப்படும் சிலம்பு கழிக்கும் விழாவினையும் எம் இல்லத்தில் மணச் சடங்கினையும் வைத்தால் என்ன என்று கேட்கலாமா?*

***நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் கழிகஎனச்
சொல்லின் எவனோ மற்றே - வெல்வேல்
மை அற விளங்கிய கழல்அடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே? (ஐங்.399)***

**2. செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல்**

*தலைவியைத் தலைவன் தன் வீட்டில் மணந்து கொண்டதைப் பாங்கி செவிலிக்கு அறிவித்தல்.*

*அன்னையே! முத்துமாலையை அணிந்த நம் தலைவியை நன்னாள் பார்த்துத் தலைவன் மணந்து கொண்டான் :* **காதலர் தாம் நன்னாள் மணம் புணர்ந்தார் என்று தூதர் நவின்றனரே** *(தஞ்.கோ.356)*

**3. வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தல்**

*தலைவன் தலைவியை மணம்புரிந்த செய்தியைச் செவிலி நற்றாய்க்கு உணர்த்துதல்.*

*வீரக் கழல் அணிந்த வேலை உடைய காளை - நம்மகளை வேனிற் காலத்தில் மணந்தவன் வருவதாகத் தூதுவர் கூறுகின்றனர்.*

***மள்ளர் அன்ன மரவம் தழீஇ
மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்
அரும்பதம் கொண்ட பெரும்பத வேனில்***

## உடன்போய் வரைந்து மீளுதலின் விரி –4

195. ஆதி ஒன்றொழித்து அல்லன நான்கும்
மாதினை உடன்போய் வரைந்து மீடற்கு
நீதியின் உரிய நினையுங் காலை.

*194ஆம் நூற்பாவில் கூறப்பட்டுள்ள பணிமொழி நற்றாய் மனையர் வேட்கையிற் செவிலியை வினாதல் தவிர்த்து,* **2. செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல், 3. வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தல், 4. உற்றாங்கு இருவரும் தலைவி இல் வந்துழித் தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு சென்று என்றல், 5. பாங்கி தானது முன்னே சாற்றியது உரைத்தல்** *என்பவை உடன்போய் வரைந்து மீளுதலின் விரியாகும்.*

(25)

## ஒருவகை மீண்டு வரைதலின் விரி–11

196. இருவர் இல்லிற்கும் இயைந்த பன்னொன்றும்
ஒருவகை மீண்டு வரைதலின் விரியே.

*191ஆம் நூற்பாவில் கூறப்பட்டுள்ள ஆறு மீட்சி விரியில் ஐந்தும் 194ஆம் நூற்பாவில் கூறப்பட்டுள்ள ஐந்தும் 192ஆம் நூற்பாவில் கூறப்பட்டுள்ள ஒன்றுமாகப் பதினொன்றும் உடன்போய் மீண்டு வரைந்து கோடலின் விரியாம்.*

1. **தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்.**
2. **தலைவி முன்செல்வோர் தம்மொடும் தன்வரல் பாங்கியாக்கு உணர்த்தி விடுத்தல்.**
3. **முன் சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்.**
4. **பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்.**
5. **நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினாதல்.**
6. **பணிமொழி நற்றாய் மனையர் வேட்கையிற் செவிலியை வினாதல்.**
7. **செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல்.**
8. **வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தல்.**
9. **உற்றாங்கு இருவரும் தலைவி இல் வந்துழித் தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு சென்று என்றல்.**
10. **பாங்கி தானது முன்னே சாற்றியது உரைத்தல்.**
11. **அவள் மனை வரைதற்கும் தன்மனை வரைதற்கும் உரியகிளவி.**

(26)

## 7. உடன் போக்கு இடையீடு

தலைவி தலைவனுடன் தனித்துப் புறப்பட்டு வேற்றூர் சேர்தல்.

தானும் தலைவியும் ஒழுகிய களவொழுக்கம் பலரானும் அறியப்படுவதன் முன், தான் தலைவியை மணக்காமல் களவொழுக்கத்தைப் பலநாள் நிகழ்த்தித் தலைவியைப் பிரிவாற்றாமையானும் நொதுமலர் வரைவுப் பேச்சானும் இற்செறிப்பானும் வருந்தச் செய்து, அவள் தன்னைப் பிரிந்து தொடர்ந்து வாழ முடியாது என்ற நிலை வந்தபோது இரவிடை அவள் உறவினர் அறியாமல் அவளை அழைத்துக் கொண்டு வேற்றூருக்குப் புறப்பட்டுத் தம் களவொழுக்கத்தை ஊர் அறியப் பரவுமாறு செய்தல்.

### உடன்போக்கிடையீட்டில் வகை –4

197. **போக்கு அறிவுறுத்தல் வரவு அறிவுறுத்தல்**
**நீக்கம் இரக்கமொடு மீட்சி என்றாங்கு**
**உடன்போக்கு இடையீடு ஒருநால் வகைத்தே.**

மேற்குறிப்பிட்ட **1.போக்கு அறிவுறுத்தல், 2. வரவு அறிவுறுத்தல், 3. நீக்கம், 4. இரக்கமொடு மீட்சி** என்னும் நான்கும் உடன்போக்கு இடையீட்டின் வகையாகும்.

**1. போக்கு அறிவுறுத்தல் :** தான் தலைவனுடன் போவதைப் பாங்கியர்க்கும் தாய்க்கும் சொல்வதற்காகத் தலைவி எதிரே வந்தவர்களை அனுப்புதலும் அந்தணர் நற்றாயிடம் தலைவி உடன்போன செய்தியை அறிவித்தலும்.

**2. வரவு அறிவுறுத்தல் :** தன் சுற்றத்தார் பின் தொடர்ந்து வருவதைத் தலைவி தலைவற்கு இடைச்சுரத்தில் அறிவித்தல்.

**3. நீக்கம் :** தலைவன் தலைவியை அவளுடைய சுற்றத்தாரோடு சேருமாறு இடைச்சுரத்தில் விட்டு நீங்குதல்.

**4. இரக்கமொடு மீட்சி :** தலைவன் தன்னை விட்டகன்ற பின்னர், தன்னை வந்தடைந்த சுற்றத்தாருடன் தலைவி மிகுந்த துயரத்தோடு இல்லத்திற்கு மீண்டு வருதல்.

(27)

### உடன்போக்கு இடையீட்டின் விரி –6

198. **நீங்கும் கிழத்தியர் பாங்கியர் தமக்குத்**
**தன்செலவு உணர்த்தி விடுத்தலும் தலைமகள்**
**தன்செலவு ஈன்றாளுக்கு உணர்த்தி விடுத்தலும்**
**ஈன்றாளுக்கு அந்தணர் மொழிதலும் ஈன்றாள்**
**அறத்தொடு நிற்றலில் தமர்பின் சேறலைத்**

தலைவி கண்டு தலைவர்க்கு உணர்த்தலும்
தலைமகள் தன்னைத் தலைமகன் விடுத்தலும்
தமருடன் செல்பவள் அவன்புற நோக்கிக்
கவன்று ஆற்றலும்என நுவன்றவை ஆறும்
உடன்போக்கு இடையீட்டு விரியா கும்மே.

மேலே குறிக்கப்பட்ட ஆறும் உடன்போக்கு இடையீட்டின் விரியாகும்.

**1. நீங்கும் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவு உணர்த்தி விடுத்தல்**

தலைவனுடன் உடன்போக்குச் செல்லும் தலைவி எதிர்ப்பட்டவர்களிடம் தான் செல்வதைப் பாங்கியரிடம் தெரிவிக்குமாறு சொல்லுதல்.

நெடுந்தொலைவு போகும் அந்தணர்களே! நும்மிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன்! தாங்கள் செல்லும் வழியில் என் பாங்கியரிடம் நும் தலைவி மேலும் பேரழகு பெற்றுக் கடத்தற்கு அரிய பாலை நில வழியில் செல்கிறாள் என்பதைக் கூறி விடுங்கள்,

**சேட்புலம் முன்னிய அசைநடை அந்தணிர்!**
**நாம்மொன்று இரந்தனென் மொழிவல் எம்ஊர்**
**யாய்நயந்து எடுத்த ஆய்நலம் கவின**
**ஆரிடை இறந்தனள் என்மின்**
**நேர்இறை முன்கைஎன் ஆயத் தோர்க்கே** **(ஐங்.384)**

**2. தலைமகள் தனிசெலவு ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தல்**

தான் தலைவனுடன் செல்வதை நற்றாய்க்குத் தலைவி தெரிவிக்கச் சொல்லுதல்.

எம் ஊர்ப் பக்கம் செல்லும் மாந்தர்களே! என் அழகிய தோள்களைப் பாராட்டி, என் காதலனை அடைய விடாமல் தடுத்த என் தாயைக் கண்டால் நின்மகள் காளை ஒருவனுடன் தேரில் கடத்தற்கு அரிய வழியில் செல்கிறாள் என்பதைத் தெரிவியுங்கள்

**கடுங்கண் காளையொடு நெடுந்தேர் ஏறி**
**கொள்வல் வேங்கைய மலைபிறக்கு ஒழிய**
**வேறுபல் அருஞ்சுரம் இறந்தனள் அவள்எனக்**
**கூறுமின் - வாழியோ! ஆறுசெல் மாக்கள்!**
**நல்தோள் நயந்து பாராட்டி**
**எற்கெடுத்து இருந்த அறன்இல் யாய்க்கே** **(ஐங்.385)**

**3. நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்**

மகளைப் பிரிந்து வாடும் நற்றாயிடம் அவள் தலைவனுடன் செல்வதை அந்தணர் கூறுதல்.